## நீர் துறை அபிவிருத்தி செயற்திட்டம் II -- 2012

---

**1. அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) முன்னைய ஆண்டிற்கான எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிசார் செயலாற்றல்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலயவினம் ரூபா 2,603,014,783 ஆனதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 5,101,547,169 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று கீழே தரப்படுகின்றது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| காணி மற்றும் காணி அபிவிருத்தி | - | 1,135,391 | 21,633,042 |
| கணனி உபகரணங்கள் | 195,000 | 324,948 | 519,948 |
| சிவில் நடைபெறும் வேலை | 2,486,921,183 | 1,464,923,879 | 4,806,560,758 |
| அதிகரிக்கும் செயற்பாட்டுக் கிரயம் | 115,898,600 | 66,056,364 | 272,833,421 |
| | **2,603,014,783** | **1,532,440,582** | **5,101,547,169** |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 23,891,846 கூட்டு மொத்தத் தொகையான செலுத்த வேண்டியவைகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் பதவியணியினருக்கான பணிக்கொடைக்கான ஏற்பாடு கணிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது ஒப்பந்தகாரர்களினூடாக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1.8 மில்லியன் தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பன ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கிடுவதற்குப் பதிலாக நடைபெறும் வேலைகளின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. மேலும் அத்தகைய சொத்துக்கள் ஆண்டின் இறுதியில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 பெப்ரவரி 28 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்க வேண்டிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம், வருமானமல்லா தண்ணீர் பிரதான திட்ட கூறின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிற்காக நிலையான சொத்துப் பதிவேடு செயற்திட்டத்தால் பேணப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 4.1 நிதிப் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | செயற்திட்ட உடன்படிக்கையின் படி வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டு ஏற்பாடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2012 திசெம்பர் 31 வரை | |
| | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 8,388 | 7,989 | 1,755 | 1,681 | 2,702 | 3,952 |
| இலங்கை அரசாங்கம் | 2,458 | 2,341 | 430 | 374 | 750 | 986 |
| மொத்தம் | 10,846 | 10,330 | 2,185 | 2,055 | 3,452 | 4,938* |

* மீளாய்வாண்டின் இறுதியின் செலுத்தவேண்டியவைகள் உள்ளடக்கப்பட்டிருக்காமையால் இத்தொகையானது இந்த அறிக்கையின் பந்தி 2 இல் காட்டப்பட்ட தொகையுடன் உடன்பட்டிருக்கவில்லை.

மேற்குறிப்பிட்ட தகவலின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தொடங்கியதிலிருந்து 4 ½ ஆண்டுகள் கடந்த பின்னரும் செயற்திட்டத்தால் ஒதுக்கீட்டின் 32 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, நீடிக்கப்பட்ட 3 ஆண்டுகள் காலப்பகுதி உள்ளடங்கலாக மிகுதிக் காலத்தின் போது ஒதுக்கப்பட்ட நிதிகளின் பயன்பாடு மிகுதிக் காலப்பகுதி மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் என்பவற்றிற்காக தயாரிக்கப்பட்ட விரிவான திட்டம் எதுவும் இல்லாமையால் கணக்காய்வில் ஐயத்திற்கிடமாக இருந்தது.

## 4.2 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------------

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீளப்பட்டியலிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டக் காலப்பகுதி 2015 நவம்பர் 12 வரை நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 66 சதவீதம் மற்றும் 44 சதவீதமாக இருந்தது. செயற்திட்டத்தின் ஒப்பந்த முகாமைத்துவம் மீதான அவதானிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(அ) ரூபா 1,185 மில்லியன் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட கந்தான தண்ணீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாண வேலைகள் நலிவான ஒப்பந்த முகாமைத்துவம் காரணமாக 3 ஆண்டுகளிற்கு மேலாக தாமதப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகளின் பௌதீக முன்னேற்றம் 2014 திசெம்பர் 31 வரையும் 86 சதவீதமாக இருந்தது. இதன்விளைவால், கெஸ்வேவ, ஜம்புரலிய மற்றும் கும்புகவில் நிர்மாணிக்கப்பட்ட தண்ணீர் கோபுரங்கள் 3 ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாது இருந்தது.

(ஆ) கொழும்பில் சிஹில் சீ பெரேரா மாவத்தையில் அமைந்திருந்த விநியோக முறைமையின் புனரமைப்பிற்கான யூபிவீசீ/ டிஐ குழாய்கள் விநியோகத்தல் மற்றும் பொருத்துதல், பொருத்தக்கள் மற்றும் டிஐ வால்வுகள் என்பவற்றுக்கான ஒப்பந்தம் 2012 ஆகஸ்ட் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் வீதி சீர்திருத்தங்களிற்காக கொழும்பு மாநகர சபைக்கு செய்யப்பட்ட ரூபா 4.5 மில்லியன் தொகையான மீளளிக்கவேண்டிய காசு வைப்புக்கள் 2014 திசெம்பர் 31 வரையும் செயற்திட்டத்தால் மீளப் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 சனவரி 31 இல் மற்றும் 2014 மார்ச் 31 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்த கொஸ்வேவ கிழக்கு/ மேற்கிற்கான விநியோக முறைமைக்கான குழாய்கள் வழங்குதல் மற்றும் பொருத்துதல் மற்றும் கொழும்பின் வலயம் IV இல் 56.5 கிலோ மீற்றர் குழாய்கள் இடம்மாற்றல் என்பவற்றின் மீதான போதிய தொழிலாளர் இன்மை மற்றும் ஒப்பந்தங்கள் ஒப்பந்தகாரரால் ஈடுபடுத்தப்பட்ட இயந்திரங்கள் என்பன காரணமாக 2012 திசெம்பர் 31 வரை முறையே 38 சதவீதம் மற்றும் 48 சதவீதமான மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது.

**4.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வழமையாக, செயற்திட்ட பதவியணியினருக்கான வேதனங்களின் கணிப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றதுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவில் பொது நிர்வாக நோக்கத்திற்காக போதிய பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் மேந்தலைகளின் 20 சதவீதம் செயற்திட்டத்திலிருந்து சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன. ஆகவே, ரூபா 14.9 மில்லியனான மேந்தலைக் கிரயம் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட பெறுகைகளில் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் செலவழிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத ஹொரனவிலுள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்காக ரூபா 1 மில்லியன் தொகையான வாடகைக்கமர்த்தப்பட்ட அலுவலகம் சார்பில் வைப்புச்செய்யப்பட்ட வைப்புக்கள் செயற்திட்டத்தின் மீளளிக்க வேண்டிய வைப்பாக கருதப்பட்டிருந்தது.

(இ) வருமானமற்ற தண்ணீர் பிரதான திட்ட கூறுடன் தொடர்புபட்ட சகல தகவல்களும் வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கடப்பட்டிருந்த போதிலும் சபையானது செயற்திட்டத்தால் வேலைக்கமர்த்தப்பட்ட ஒப்பந்தகாரருக்கு டிஜிரல் படங்களை வழங்குவதற்கு செயற்திட்டத்திடமிருந்து ரூபா 4.3 மில்லியனை சாட்டுதல் செய்திருந்தது.